**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 133/2019**

**Date : 19.01.2026**

**பி.வா.சா.1 - ஆத்தியப்பன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடரச்சி.**

வாதி வழக்குரையுடன் மனு எண்.2/2019 இடைக்கால தடை உத்தரவு கோரி தாக்கல் செய்தார் அதற்கு எதிருரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி எதிருரையில் 4ம் பத்தியில் வழக்குரை சொத்தில் உள்ள கோவிலானது பிரதிவாதியும் அவருடைய குடும்பத்தாரும் பொது நபர்களும் சேர்ந்து கட்டியுள்ளோம் மற்றும் மேற்படி கோவிலை நாங்கள் தான் பராமரித்து வருகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் 3612/2013 என்ற பாகப்பத்திரத்தின்படி வழக்குரை சொத்தானது கோவில் நிலமாக வாதிகளின் குடும்ப சொத்தில் பொது சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர்களுக்கும் கோவிலுக்கும் சம்மந்தமில்லை.

மேற்படி மனுவில் நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் 12 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 12 வது ஆவணமாக மினிட் புக் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதன் முதல் பக்கத்தில் செயற்குழு கூட்டம் என்று எழுதப்பட்டுள்ளது, கூட்டம் நடத்தப்பட்ட தேதி 13.08.2013 (ஆடி 28 நேரம் இரவு 7.00 மணி) என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் ஆடி மாதம் 2ம் தேதி அன்று கொடைவிழா நடைபெற்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2012 முதல் 2013 வரை மொத்த வரவு, செலவு ரூ.23,500/- என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.20 ல் பக்கம் 20 ல் 2013 கொடை விழாவிற்க்கான மொத்த செலவு ரூ.1,44,250/- மற்றும் மொத்த வரவு ரூ. 1,11,452/- என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.20 ல் பக்கம் 16 ல் 2013 ம் வருடம் வைகாசி மாதம் 13 ம் தேதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் எதிருரையுடன் தாக்கல் செய்யப்பட்ட மினிட்புக்கில் ஆடி 28 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2013 முதல் 2017 க்கான வரவு செலவு மட்டும் தான் மேற்படி மினிட்புக்கில் உள்ளது ஆனால் பி.வா.சா.ஆ.20 ல் 2010 முதல் 2019 வரையிலான வரவு, செலவு கணக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிருரையுடன் தாக்கல் செய்யப்பட்ட 12 வது ஆவணமான மினிட்புக் நகலில் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் இருப்பதாகவும் மற்றும் உறுப்பினர்கள் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் பி.வா.சா.ஆ.20 ல் 5 குடும்பத்தார் சேர்ந்து நடத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மனு எண். 2/2019 ல் எதிருரையுடன் தாக்கல் செய்யப்பட்ட மினிட்புக் நீதிமன்றத்தை ஏமாற்றி தாக்கல் செய்து வாதிகோரிய பரிகாரம் கிடைக்கவிடாமல் மனு தள்ளுபடி செய்ய வைத்தோம் என்றால் சரியல்ல. ஒரு கோவிலை பராமரிக்க அதன் நிர்வாகிகள் ஒரு மின்புக் தான் எழுதுவார்கள் அதன்படி தான் அனைத்து காரியங்களும் நிறைவேற்றப்படும் என்றால் சரிதான். இரண்டு மினிட்புத்தகங்கள் தயார் செய்து மேற்படி மனுவில் தாக்கல் செய்தோம் மற்றும் மற்றொரு மினிட்புத்தகம் பி.வா.சா.ஆ.20 ஆக தயார் செய்து குறியீடு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தை ஏமாற்றி செய்த காரியங்களுக்கு என் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. 07.09.2019 அன்று நீர்வளத்துரை பிரிவிலிருந்து ஆத்தியப்பன் என்பவருக்கு ஒரு கடிதம் போடப்பட்டது என்றால் சரியல்ல அது மோசடியாக கொடுக்கப்பட்டது. நாங்கள் கட்டிவைத்த கோவிலை 25.11.2019 அன்று காவல்துறையினர் மற்றும் RDO அலுவலகத்தில் இருந்து வந்து இடித்தார்கள் என்றால்

சரிதான் காவல்துறையினர் செல்வாக்கில் இடிக்கப்பட்டது.

மனு எண். 2/2019 ல் எதிருரையுடன் தாக்கல் செய்யப்பட்ட 12 ஆவணங்களும் இடிக்கப்பட்ட கோவிலை சார்ந்தது என்றால் சரிதான். எங்களின் கோவிலை இடித்தபின் வதியின் கோவிலை நடைபெற விடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் அதிலிருக்கும் பொருட்களை எடுத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. அதற்கு தென்தாமரை குளம் காவல்துறையினர் குற்ற எண்.155/2018 என்ற குற்ற வழக்கை ஆத்தியப்பன் மற்றும் நான்குபேர் மீது வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் அது கள்ளத்தனமாக போடப்பட்டது. மேற்படி வழக்கானது விசாரணையில் தெளிவானதால் நாகர்கோவில் நீதித்துறைநடுவர் எண்.1 ல் STC 2/2020 என்ற வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 தென்தாமரைகுளம் காவல்துறையினர் குற்ற எண்.44/2019 முதல் தகவல் அறிக்கையில் நாங்கள் வாதியின் கோவிலை கிரில்லை உடைத்து அதிலிருந்த 20 ஆயிரம் மதிப்புள்ள பொருட்களை எடுத்து சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.7 ல் உள்ள குற்றவாளிகள் பெயரில் வழக்கின் மற்ற பிரதிவாதிகள் பெயர் உள்ளது என்றால் சரியல்ல. விசாரணையில் சம்பவம் உண்மை என்று கூறி நாகர்கோவில் நீதித்துறை நடுவர் எண். 3 ல் சி.சி.எண். 495/2020 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான் அது பொய்யான வழக்கு. வா.சா.ஆ.15 ல் நானும் இதர பிரதிவாதிகளும் சேர்ந்து வாதியையும் வாதியின் தாயாரையும் கோவிலில் தரிசனம் செய்யவிடாமல் தடுத்து அவரது வாகனத்தை உடைத்து நாசப்படுத்தியதன் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எண்.100/2022 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. விசாரணையில் சம்பவம் உண்மை என்று கூறி நாகர்கோவில் நீதித்துறை நடுவர் எண். 3 ல் சி.சி.எண். 237/2022 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான் அது பொய்யான

வழக்கு. எங்களது கோவிலுக்கு மின்இணைப்பு வேண்டி 27.04.2016 அன்று மனு கொடுத்தோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 24.06.2016 அன்று வட்டாட்சியர் அகஸ்தீஸ்வரம் அவர்கள் ஆத்தியப்பன் என்பவருக்கு கோவில் புறம்போக்கு நிலத்தில் இருப்பதால் மின் இணைப்பு தரப்படமாட்டாது என்று குறிப்பிட்டு கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். **மேற்படி கடிதம் வா.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் கோவிலின் தெற்கு பக்கம் ரோடு உள்ளது அந்த ரோட்டை ஒட்டி பாறை உள்ளது என்றால் சரிதான். **மேற்படி புகைப்படம் வா.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி வா.சா.ஆ.21ல் இருக்கும் பாட்டி ஆனந்தம்மாள் என்றால் சரிதான்.

வழக்கு பட்டிகை சொத்தை அளப்பதற்கு நீதிமன்ற ஆணையர் வந்தார் என்றால் வந்தார் ஆனால் எதுவும் அளக்கவில்லை. மேற்படி விபரத்தை கூறி நீதிமனற்த்தில் மெம்மோ தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் நீ.ம.சா.ஆ.1ல் 6.768 செண்ட் வழக்குரையில் சொல்லப்பட்டாலும் ABC என்று குறிப்பிடப்பட்ட இடத்தில் பரப்பளவு கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் கோவிலை இடிக்கப்பட்ட நேரத்தில் அனைத்து காவல்துறையினரும் இருந்தனர் என்றால் சரிதான். **மேற்படி புகைப்படங்கள் வா.சா.ஆ.26 மற்றும் வா.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வாதிக்கும் எங்களுக்கும் பிரச்சனை இருந்ததால் காவல்நிலையத்தில் ஆர்.டி.ஓ முறையிட்டு ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வாதிக்கும் எங்களுக்கும் சமரசம் பேசுவதற்காக வாதி தரப்பில் ராஜதுரை "A" Group ஆகவும் பிரதிவாதிகள்

ஆத்தியப்பன் பெயரில் "B" Group ஆகவும் சமரசம் பேசினார்கள் அதில் வழக்கு பட்டிகை சொத்தில் இருக்கக்கூடிய கோவில்களும் சொத்துக்களும் வாதியினுடையது என்றால் நாங்கள் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. பின்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கோவில் மற்றும் சொத்துக்கள் வாதிக்கு உரிமைப்பட்டது என்று அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதியின் கோவிலில் திருவிழாவிற்கு நாங்கள் செல்வதுண்டு என்றால் சரியல்ல அது எங்களுடைய கோவில். எங்களின் கோவிலை இடித்த பின்பு வாதியின் கோவிலுக்கும் எங்களுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல அது எங்களுடைய கோவில்.

எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் வாதியின் கோவிலில் நடைபெற்ற திருவிழா சம்மந்தப்பட்ட ஆவணங்களையும் சேர்த்து குறியீடு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு பூமி இல்லாததால் பொய்யான ஆவணங்களை தயார்செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடரச்சி முடிக்கப்படுகிறது.**